ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2269/72 - 2022 මාර්තු මස 04 වැනි සිකුරාදා - 2022.03.04
*2269/72 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

**அறிவித்தல்**

**ஆடைகள் உற்பத்தித் தொழில்**

ஆடைகள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப் பட்டுள்ள சபையின் தீர்மானங்களை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச்சட்டத்தின் (136 - ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க இத்தால் அறிவிக்கின்றது.

மேற் கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2022ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை சபைத் தலைவரினால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஒவ்வோர் ஆட்சேபணையும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,**
தலைவர்,
புடைவை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை.

"மெஹெவரபியெச",
தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் தேதி.

**அட்டவணை**

*ஆடைகள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1966ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25ஆந் திகதி, 14688ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவையும், காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டவையும், 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 26ஆந் திகதிய 2081/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இறுதியாக, மாற்றப்பட்டவையுமான முடிவுகள், அட்டவணையின் 11 ஆம் பகுதிக்காகப் பின்வரும் புதிய பகுதியினைப் பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும்.*

**பகுதி 11**

*தொழிலாளர்கள் வகுப்பு*

*தரம்* I *(அ) வடிவமைப்போர், தையலாளர்கள், வடிவம் துளையிடுவோர், டிஸ்கெற் தயாரிப்பேர்.*

*(ஆ) தலைவர்கள் அல்லது பகுதி மேற்பார்வையாளர்கள்.*

*தரம்* II *துணி வெட்டுவோர், கையால் துணி வெட்டுவோர், இயந்திரப் பழுதுபார்ப்போர், இறுதியாகச் சரிபார்ப்போர்.*

*தரம்* III *சரிபார்ப்போர், தரம் பிரிப்போர், துணி அழுத்துவோர் (ஆண்கள்), சில்லறை வேலை செய்வோர் (பெண்கள்), பெயர் முத்திரையிடுவோர் (பெண்கள்), ஆணி அழுத்துவோர் (பெண்கள்), தையல் இயந்திரம் இயக்குவோர், மின் அழுத்தி இயக்குனர்கள், வழங்கும் தொழிலாளர்கள் (பெண்கள்), சித்திர வேலைப்பாடு இயந்திரத்தினால்/கையால் செய்வோர்.*

*தரம்* IV *துணி விரிக்கும் ஆண்கள், துணி விரிக்கும் பெண்கள், பொதியிடுவோர், செலபீன் பைகளும், அட்டைப் பெட்டிகளும் தயாரிப்போர், தேர்ச்சியற்ற தொழிலாளர்கள், களஞ்சியத் தொழிலாளர்கள்.*

*தரம்* V *பயிற்சியாளர்களும், பயிலுநர்களும்.*

*பயிற்சியாளர்களும், பயிலுநர்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள எவரேனும் தொழில் பயிற்சியாளர் அல்லது பயிலுநர் தொடர்பான பயிற்சிக்காலம் 156 வேலை நாட்களைக் கொண்டமைந்ததாகக் கருதப்பட வேண்டும்.*

**ஒரு மாதத்திற்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்.**

| ஊழிய ஆண்டு | தரம் 1 அ | தரம் I | தரம் II | தரம் III | தரம் IV | தரம் V |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1ஆம் ஆண்டு | 15,875.00 | 15,275.00 | 13,760.00 | 13,650.00 | 13,000.00 | 8,125.00 |
| 2ஆம் ஆண்டு | 16,075.00 | 15,450.00 | 13,910.00 | 13,775.00 | 13,100.00 | |
| 3ஆம் ஆண்டு | 16,275.00 | 15,625.00 | 14,060.00 | 13,900.00 | 13,200.00 | |
| 4ஆம் ஆண்டு | 16,475.00 | 15,800.00 | 14,210.00 | 14,025.00 | 13,300.00 | |
| 5ஆம் ஆண்டு | 16,675.00 | 15,975.00 | 14,360.00 | 14,150.00 | 13,400.00 | |

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

**அறிவித்தல்**

**மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழில்**

*மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப் பட்டுள்ள சபையின் தீர்மானங்களை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச்சட்டத்தின் (136 ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க இத்தால் அறிவிக்கின்றது.*

*மேற் கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2022ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் சபையின் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*அத்தகைய ஒவ்வோர் ஆட்சேபணையும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

**பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,**
*தலைவர்,*
*மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான*
*சம்பளச் சபை.*

“மெஹெவரபியெச”,
தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
*2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் தேதி.*

**அட்டவணை**

*மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டடு 1999 ஆம் ஆண்டு செத்தைம்பர் மாதம் 28 ஆந் திகதிய 1099/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் எனப் பிரசுரிக்கப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டவையும் காலத்திற்குக் காலம் வேறுபடுபடுத்தப்பட்டதும் இறுதியாக 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதிய 2090/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிவுகள் அவ்வட்டவணையிலிருந்து பின்வரும் பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்பட வேண்டும்.*

**தொழிலாளர் வகுப்பு.**

*1. தேர்ச்சியுடையோர்*

*பிரிவுத் தலைவர்கள், நானாவித இயந்திர இயக்குநர்கள், வடிவமைப்போர். சார்ஜ் ஹேன்டர்ஸ், (charge handers) போறணை இயந்திர இயக்குநர்கள், அடுப்பு (oven) இயக்குநர், சிரேஷ்ட மின்தூக்கி இயக்குநர், அச்சுருவங்கள் அமைப்போர், ஆராய்ச்சி உதவியாளர்கள், சிற்பங்களை அமைப்போர், படவரைஞர்கள், செவ்வை பார்ப்போர், மின்னுட்பவியலாளர்.*

*2. ஓரளவு தேர்ச்சியுள்ளோர்.*

*உதவி அச்சுருவங்களை அமைப்போர், நிறம் தீட்டுவோர், (ஸ்பிறே பண்ணுவோர், டிப்பர்ஸ்), தெரிவுசெய்வோர், கனிஷ்ட மின்துக்கி இயக்குநர், மெருகூட்டுநர், பொதி செய்வோர், பொருட்களை சுத்தஞ்செய்வோர், ஸ்ரிக்கர்ஸ் ஒட்டுவோர், ஷவல் லோடர் (shovel loader) இயக்குநர், உதவி இயந்திர இயக்குநர், மின்சார உற்பத்தி இயந்திர இயக்குநர், உதவி அடுப்பு (oven) இயக்குநர்.*

*3.* தேர்ச்சியற்றோர்

சுத்திகரிப்போர், உதவியாளர்கள், சாதாரண வேலையாட்கள், தோட்ட வேலையாளர்கள், இவற்றையொத்த ஏனைய சேவைகளில் ஈடுபட்டுள்ளோர்.

*4.* பயிலுனர்கள்

இரண்டு ஆண்டுக்கால பயிற்சி வரையறையின் கீழ் நானாவித துறைகளிலும் பயிற்சி பெறுவோர்.

**மாதமொன்றுக்கு வழங்கப்படவேண்டிய ஆகக்குறைந்த சம்பள அளவு**

| சேவை ஆண்டு | தேர்ச்சியுள்ளோர் ரூ. ச. | ஓரளவு தேர்ச்சித் திறனுள்ளோர் ரூ. ச. | தேர்ச்சித்திறன் அற்றோர் ரூ. ச. | பயிலுனர் ரூ.ச. |
|---|---|---|---|---|
| 1ஆம் ஆண்டு | 15,500.00 | 14,500.00 | 13,500.00 | 8,215.00 |
| 2ஆம் ஆண்டு | 15,680.00 | 14,625.00 | 13,600.00 | 8,215.00 |
| 3ஆம் ஆண்டு | 15,800.00 | 14,750.00 | 13,700.00 | |
| 4ஆம் ஆண்டு | 15,950.00 | 14,675.00 | 13,800.00 | |
| 5ஆம் ஆண்டு | 16,100.00 | 15,000.00 | 13,900.00 | |

EOG 03 - 0756/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.